அ.வ.எண்: 14/2025 நாள்: 19.01.2026
வா.சா.1 – பெரியசாமி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தாவா வழக்கின் 1–ம் வாதி என்றால் சரிதான். 2,3,4 வாதிகள் என் தந்தையின் இரண்டாம் மனைவியின் வாரிசுகள் என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் சுப்பையா என்றால் சரிதான். என் தகப்பனார் முதலில் யாரை திருமணம் செய்தார் என்றால் என் தாயாரான பெரியநாயகி என்பவரை திருமணம் செய்தார். என் தகப்பனார் பெரியநாயகி என்பவரை திருமணம் செய்தார் என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது பிராதில் எந்த தேதி, எந்த மாதம் சுப்பையா–பெரியநாயகி தம்பதியினருக்கு மகனாக பிறந்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 1955 ஆம் ஆண்டு பிறந்ததற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து நினைவில் இல்லை.

2. என் தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. என் தாயார் பெரியநாயகி எந்த வருடம் இறந்தார் என்றால் 2008 ஆம் ஆண்டு இறந்தார். மேற்படி விவரத்தை நான் எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் தாயார் பெரியநாயகி இறந்த பிறகு தான் என் தந்தை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல என் தாயார் உயிருடன் இருக்கும் பொழுதே இரண்டாவதாக சிலையம்மை என்பவரை திருமணம்செய்து கொண்டார். மேற்படி திருமணம் எந்த ஆண்டு நடைபெற்றது என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. இரண்டாம் வாதி எந்த ஆண்டு பிறந்தார் என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. 3,4 வாதிகள் பிறந்த ஆண்டும் எனக்கு நினைவில் இல்லை என்றால் சரிதான். சுப்பையா–சிலையம்மை தம்பதிக்கு பிறந்த வாரிசுகள் தான் 2,3,4 வாதிகள் என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை நான் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. 2 முதல் 4 வாதிகள் என் தகப்பனாரின் வாரிசுகளாக இருந்திருந்தால் அவர்கள் பிறந்த வருடம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும்

வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல, வயது முதிர்வின் காரணமாக என்னால் நினைவில் வைத்துக்கொள்ள இயலவில்லை. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களை மாற்றம் செய்வதற்காக வாரிசு சான்றிதழ் கேட்டுள்ளேன் என்றும், ஆனால் அவர் பெயரில் சொத்துக்கள் இருப்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் பிறந்த சகோதரர்கள் வேறு யாரேனும் உள்ளனரா என்றால் இல்லை, இது சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலர் என்னை விசாரணை செய்தாரா என்றால் இல்லை.

4. கிராம நிர்வாக அலுவலர் மேற்கொண்ட விசாரணையில் என்னுடன் பிறந்த சகோதரரான ராஜு என்பவர் உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் அவர் இருப்பதை மறைத்துவிட்டு வாரிசு சான்றிதழ் கேட்டுள்ளதால் அது கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல, அவர் சிறு வயது முதலே காணாமல் போய்விட்டார் அவரை நான் பார்த்தது இல்லை. மேற்படி ராஜு என்பவர் தற்போது உயிருடன் உள்ளார் என்றும் அதனை மறைத்து நான் பொய்யாக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாரிசு

சான்றிதழ் கேட்டு இணையதளத்தில் விண்ணப்பம் செய்தேனா என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. வாரிசு சான்றிதழ் கேட்டு நான் என்னென்ன மனுக்கள் கொடுத்தேன் என்றால் நான் மனு எதுவும் கொடுக்கவில்லை, வேறு யார் மனு கொடுத்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் உண்மைகளை மறைத்தும் சரியான ஆவணங்களை தாக்கல் செய்யாததாலும் நான் இணையதளத்தில் தாக்கல் செய்த மனு திரும்பப் பெறப்பட்டுவிட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது, நான் மனுவை தாக்கல் செய்யவில்லை, யார் தாக்கல் செய்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. தாவா வழக்கு தொடர்பான விவரங்கள் எதுவும் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் வாரிசு சான்றிதழ் கேட்டு எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யாமல் நேரடியாக நீதிமன்றத்தை அணுகியுள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு சம்பந்தமான விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது பிராவில்

குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றும் அவ்வாறு நிருபிக்க தவறியதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.01.19 16:07:48 +0530